IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 145/2009

P.W.1 - திருமதி.சாந்தி

DATE - 02.12.2025

வா.சா.1 குறுக்கு விசாரணை- 4, 5 பிரதிவாதிகள் தரப்பில்

சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை ஆனால் அது தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் விற்கப்பட்ட சொத்து என்பதால் உரிமை மூலம் குறித்து விசாரிக்கவில்லை. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் முதலில் யாரிடமிருந்து சொத்தை ஆர்ஜிதம் செய்தது என விசாரித்தேனா என்றால் தெரியாது. அது குறித்து வில்லங்கம் பார்த்தேனா என்றால் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்து என்பதால் வில்லங்கம் பார்க்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் கஸ்தூரிக்கு கிரையம் செய்த சொத்தை, கஸ்தூரி அதனை சசிகலாவிற்கு கிரையம் கொடுத்து நான் சசிகலாவிடமிருந்து கிரையம் பெற்றதால் வீட்டு வசதி வாரியம் எழுதி கொடுத்த சொத்து என்பதால் வில்லங்கம் சொத்து உரிமை குறித்து பார்க்கவில்லை. வில்லங்கம் சொத்து முக்கிய பகுதியில் இருப்பதால் தற்போது நான் வில்லங்கம் எதுவும் பார்க்காமல் வாங்கிவிட்டேன் என பொய்யாக சொல்கிறனே் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் நாயினா முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாயினா முதலியார் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் வள்ளியம்மாள், முனுசாமி, பழனி, கோபால், தஞ்சம்மாள், எல்லம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் 1972 ல் உத்தரவு பிறப்பித்து நாயினா முதலியார் வாரிசுகளிடமிருந்து சொத்தை கையகப்படுத்தியது என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது.  தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் சொத்தை கையகப்படுத்தியப் பின்னர் நாயினா முதலியார் வாரிசுகளுக்கு Award வழங்கியது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி Award வழங்கியப் பின்னர் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தாவா சொத்து மற்றும் சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை தாவா சொத்து மற்ற கையகப்படுத்திய சொத்துக்களை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தான் சுவாதீனத்தில் வைத்திருக்கிறது என்றால் தாவா சொத்து சுவாதீனம் என்னிடம் தான் இருக்கிறது மற்ற சொத்துக்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது.  இன்றைய தேதி வரை தாவா சொத்து தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திடம் தான் சுவாதீனத்தில் இருக்கிறது என்றும் நான் பொய்யாக சுவாதீனம் என்னிடம் இருக்கிறது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 02.12.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.12.02 19:17:50 +0530

Additional District Judge(FTC),

Vellore.